# பாகிஸ்தானில் ஈரான் நடத்திய வான்வழித் தாக்குதல்கள் குறித்து ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் அளித்த பதில்

ஜனவரி 17, 2024

**பாகிஸ்தானில் ஈரான் நடத்திய வான்வழித் தாக்குதல்கள் தொடர்பாக ஊடகங்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த அதிகாரப்பூர்வ செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெயஸ்வால் அவர்கள் கூறியதாவது:**

"இது ஈரானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான விவகாரம் ஆகும். இந்தியாவைப் பொறுத்தவரை பயங்கரவாதத்தை சகித்து கொள்ளாத சமரசமற்ற நிலைப்பாட்டை நாங்கள் கொண்டுள்ளோம். நாடுகள் தமது தற்காப்புக்காக எடுக்கும் நடவடிக்கைகளை நாங்கள் புரிந்துகொள்கிறோம்."

**புது தில்லி**
**ஜனவரி 17, 2024**